**செய்தி வெளியீடு எண்– 988** **நாள்– 14.11.2008**

# பத்திரிக்கை குறிப்பு

தமிழக அரசின் நிறுவனமான கோ–ஆப்டெக்ஸ், கடந்த 2007–08 ஆம் ஆண்டில் சில்லறை விற்பனை ரூ.131.02 கோடி மற்றும் ஒப்பந்த விற்பனை ரூ.314.62 கோடி செய்து சாதனை படைத்ததில், ரூ.12.34 கோடி அளவிற்கு இலாபம் ஈட்டியுள்ளது. கடந்த தீபாவளி பண்டிகை விற்பனையான ரூ.50.00 கோடி, நடப்பாண்டில் தீபாவளி 2008–ன் விற்பனை குறியீடான ரூ.60 கோடிக்கு, ரூ.62 கோடி விற்பனை செய்துள்ளது. தமிழக அரசினால் வழங்கப்பட்ட இலங்கை தமிழர் நிவாரண பொருளுதவி திட்டத்தினை சீரிய முறையில் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டது. இந்தியா முழுவதும் பணியாற்றும் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து பணியாளர்களுக்கும் 2007–08 ஆம் ஆண்டிற்கு தீபாவளி போனஸ் 20 சதவீதம் உச்சவரம்பாக ரூ.8,400/–ஐ, 1009 பணியாளர்களுக்கு வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதில் ஏற்கனவே வழங்கப்பட்ட 10 சதவீத தீபாவளி போனசான ரூ.4,200/– போக மீதமுள்ள ரூ.4,200/–ஐ தற்போது வழங்கப்படுகிறது. இதற்கான கூடுதல் செலவு ரூ.42.38 இலட்சம் ஆகும்.

மேலும் கோ–ஆப்டெக்ஸ் ஊழியர்களின் நீண்டநாள் கோரிக்கையான சரண் விடுப்பு, தமிழக அரசு உழியர்களுக்கு தற்போது வழங்குவதைப்போல் ஆண்டிற்கு 15 நாட்கள் சரண் விடுப்பு நடப்பாண்டிலிருந்து ரூ.56 இலட்சம் கூடுதல் செலவில் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஊழியர்களின் இதர கோரிக்கைகளைப்பற்றி பரிசீலிக்க ஒரு குழு அமைக்கப்பட்டு முடிவெடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

**வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**